**தலைப்பு 228 – நீதிமன்ற நிர்வாகத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நீதிமன்ற நிர்வாகத் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 3,375,669,923 தொகை நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாமையினால் மொத்த சொத்துக்களும் மொத்த பொறுப்புக்களும் அப்பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடைமுறை வேலைகளின் பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்குரிய ஆதனங்கள் மற்றும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பூர்த்தி பெறுமதி மாத்திரம் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வின் பொது சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் நடைமுறை வேலைகளின் பெறுமதி எதிர்வரும் ஆண்டு முதல் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) 12 நிர்மாண செயற்திட்டங்களுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 122,699,334 முற்பணத் தொகை (VAT தவிர்த்து) மற்றும் அந்த முற்பணத் தொகையிலிருந்து 2018 | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(I) ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் (3) மற்றும் (4) ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணம் | எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட சகல செயற்திட்டங்களுக்காகவும் முற்பணக் கணக்குகள் மற்றும் முறையான ஒதுக்கக் கணக்குகளை ஆரம்பிப்பபதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட முற்பணம் ரூபா 47,261,952 தொகையான வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கிலும் ஒதுக்கக் கணக்கிலும் உள்ளடக்கப்படாமையினால் அந்த இரண்டு கணக்குகளினதும் மீதிகள் ரூபா 75,437,382 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | செலுத்துதல் மற்றும் முற்பணம் அறவிடல் என்பன கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எடுக்கப்படுகின்றது. |

## 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களுக்காக பணம் செலவிடல் ரூபா 7,276,557,381 ஆக இருந்த போதிலும், ஏசீஏ-2(II) படிவத்தின் படி ஆளணி சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களுக்காக காசேட்டின் பிரகாரம் ஏற்பட்ட செலவினம் ரூபா 6,289,247,205 ஆனமையின் காரணமாக ரூபா 987,310,176 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | தலைப்பு இலக்கம் 228 நீதிமன்ற நிர்வாக செலவின விடயத்திற்குரிய காசேடு நாடு முழுவதும் உள்ள மேல் நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்களினால் பேணிச் செல்லப்படுகின்றது. அந்த குறிப்புக்கள் அமைச்சிற்கு மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் அறிக்கையிடப்படுகின்றது. அந்த கணக்குப் பொழிப்புக்கள் சகலதும் ஒன்றிணைக்கப்பட்டு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கணக்குப் பொழிப்பினை அடிப்படையாகக் கொண்டு பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட அச்சிடப்பட்ட திறைசேரி பிரதிகளில் உள்ள தகவல்களில் இருந்து ஏனைய தணைக்களங்களினால் செய்யயப்பட்ட செலவினம் குறைக்கப்பட்டு எஞ்சிய மீதி காசேட்டின் பிரகாரம் செலவினங்களாக கருதி காசுப்பாய்ச்சல் சுற்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலே காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறை ரீதியான பிரச்சினைகளால் காசாக செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் காசேட்டின் பிரகாரம் ஒப்பீடு செய்து பெறுதல் வசதியீனமாக இருந்தது. எதிர்காலத்தில் இதற்குத் தேவையான தகவல்களை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வண்டின் வருடாந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,442,012 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடங்கியுள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாத கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 8,675,188 ஆகும். | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி, 3 ஆம் பந்தி, தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்தத் தொகையில் ரூபா 641,959.95 தொகை 2019 யூன் 30 ஆந் திகதியளவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடன் அறவிடல் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய நீதிமன்றத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தியோகத்தர்களினால் அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும், திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே ரூபா 13,038,442 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த வேறுபாட்டிற்கான காரண விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும், திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்குமிடையே வேறுபாடு ஏற்படுமிடத்து வேறுபாட்டிற்கான காரண விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். | மேல் நீதிமன்ற வலய கணக்குகளின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுமொத்தத்திற்கும், மேல் நீதிமன்ற கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுக்கும் இடையே இனங்காமைகளுக்கு தாக்கமளித்த காரணங்கள் உரிய நீதிமன்றங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வலயக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்குமிடையே இணக்கமின்மைகள் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுவதுடன் முன்னைய ஆண்டிற்குரிய இனங்காமைகளுக்கான காரணங்களை குறிப்பாக கண்டறிவதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணம் “பீ” கணக்கின் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையினதும், திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கினதும் மொத்த வேறுபாடு ரூபா 13,038,442 தொகையாக இருந்ததுடன், 25 நீதிமன்ற வலயங்களின் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பினதும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளினதும் வேறுபாடு அதற்குச் சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதி ரூபா 714,948 ஆக காணப்பட்டது. | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும், திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே வேறுபாடு ஏற்படுமிடத்து வேறுபாட்டிற்கான காரண விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். | நீதிமன்ற வலயத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளில் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும், கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் இடையே உள்ள இணக்கஞ் செய்யப்படாத மீதிகளை இனங்கண்டு அதற்கு காரணமான விடயங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுத்தலின் தேவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் அதன் செயல்முன்னேற்றம் அமைச்சிற்கு அறிக்கையிடப்படுவதுடன் உரிய நீதிமன்றத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் செயல் முன்னேற்றம் அமைச்சினால் அவ்வவ்போது பரீட்சிக்கப்படுகின்றது. |

### 1.6.4 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மொத்த வைப்பு மீதி தொடர்பாக அந்தந்த நீதிமன்ற வலயங்களின் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், வைப்பு மீதிகளின் நீதிமன்ற நிர்வாகத்திற்குரியதாக அமைச்சில் காணப்படுகின்ற வைப்புக் கணக்குகளுக்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு சம்பர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த வைப்பு மீதி ரூபா 35,510,959 தொகையாக இருந்ததுடன் அது மொத்த வைப்புத் தொகையில் 15 சதவீதமாகும். | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற வலயங்களுக்குரிய கணிசமான வைப்புக்களின் காலப்பகுப்பாய்வொன்றைச் சமர்ப்பித்தல் நடைமுறையில் வசதியீனமாக இருந்தது. தலைமை அலுவலகத்திற்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த காலஎல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய பழைய கோவைகள் பரீட்சிக்கப்பட்டு விடயங்களை ஆய்வு செய்ததன் பின்னர் பதில் தயாரிக்கப்பட வேண்டியிருந்தமையால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கும் போது காலதாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் குறித்துரைத்த திகதியில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(1)(அ) | நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் உடனடியாக அந்தப் பெறுமதி மற்றும் காரணங்களை சரியாக அறிந்து கொள்வதற்கும் அதற்கு | நிதிப்பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் திறைசேரியிலிருந்து ஆலோசனை பெற்று கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறுப்பானவர்களை தீர்மானிப்பதற்காக பரிசோதனை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஏற்பட்ட 10 வாகன விபத்துக்களுக்குரிய நட்டங்களை மதிப்பீடு செய்து அந்த நட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) | 55 வாகன விபத்துக்களுக்குரிய 2,880,138 தொகையான நட்டம் தொடர்பாக 01 வருடம் முதல் 10 வருடம் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும், அந்த நட்டம் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது ஏற்படுகின்ற வாகன விபத்துக்களுக்குரிய நட்ட இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணக்காய்வினால் விசாரணை செய்துள்ள பழைய வாகன விபத்துக்களுக்குரிய பரிசோதனைகள் நடாத்துதல் தொடர்பாக காணப்படுகின்ற நடைமுறைரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் 20 மேல்நீதிமன்ற வலயங்களுக்குரிய 61 வங்கிக் கணக்குகளில் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 | நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும். அதன் மூலம் சுட்டிக் |

| | | |
|---|---|---|
| | மாதங்களை விஞ்சிய ரூபா 2,568,001 தொகையான காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காட்டப்பட்டுள்ள 06 மாதங்களை விஞ்சிய தொடர்ந்தும் ஓய்வுசெய்யப்பட்டாத காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### (அ) நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) காலி நீதிமன்றத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 250 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 87.26 மில்லியன் தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றியதன் பின்னர் சேமிப்பு ரூபா 162.74 மில்லியனாகக் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொள்கை ரீதியான காரணத்தின் அடிப்படையில் காலி நீதிமன்றத் தொகுதியை வேறொரு இடத்தில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் இந்த மொத்த நிதி ஏற்பாடான ரூபா 250 மில்லியனும் சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பிரமாணம் 66 இன் ஊடாக அதில் ஒரு பகுதி வேறொரு செயற்திட்டத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) சுயமாக செயற்படும் வழக்கு கோவை முகாமைத்துவ முறைமைக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 50 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதிஏற்பாடு முழுவதும் | -மேற்படி- | இந்த செயற்திட்டத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், செயற்திட்டத்தை ஆரம்பிக்கின்ற போது நீதிமன்ற முறைமையில் அதற்குப் பொருத்தமான சூழலொன்றைத் தயாரிப்பதற்கான |

| | | |
|---|---|---|
| சேமிக்கப்பட்டிருந்தது. | | அடிப்படை வசதிகள் காணப்படாமையின் காரணமாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |

**(ஆ) நிதிஏற்பாட்டின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,321.60 மில்லியன் தொகையான தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 618.76 மில்லியன் தொகையும், 04 மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2.58 மில்லியன் தொகையான தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 1.00 மில்லியன் தொகையும் சேமிக்கப்பட்டிருந்தன. அது தேறிய நிதிஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மூலதன செலவின விடயங்களுக்குரிய செயற்திட்டங்களைச் செய்கின்ற போது ஏற்பட்டிருந்த நடைமுறை ரீதியிலான பிரச்சினைகள் மற்றும் கொள்கை ரீதியிலான தீர்மானத்தின் அடிப்படையில் சில செயற்திட்டங்கள் நலிவடைந்திருந்ததுடன் உரிய பிரகாரம் திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காமையினால் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் ஏற்படுகின்ற மீண்டெழும் சேவைகள் அல்லது வழங்கல்களின் கீழ் அல்லாத 06 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் சேமிப்பை விஞ்சி ரூபா 10.18 மில்லியன் தொகையான பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் வருடாந்தம் ஏற்படுகின்ற மீண்டெழும் சேவை அல்லது வழங்கல்களின் கீழ் அல்லாத மீண்டெழும் செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்படுவதற்கு பல்வேறு விடயங்கள் காரணமாக இருந்ததுடன், நீதிமன்ற நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லுதல் |

| | | |
|---|---|---|
| | | அத்தியவசியமாக இருக்கின்றமையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மேலும் அறியத்தருகின்றோம் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டதன் பின்னர் 2015 செப்தெம்பர் 22 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2015 ஒக்தோபர் 14 ஆந் திகதிய “MNPEA/PLN/APG/15” ஆம் இலக்க வழிகாட்டி மற்றும் 2015 நவம்பர் 13 ஆந் திதகிய “PC/MD/P/AP” ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் என்பவற்றின் ஆலோசனையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் மூலதன செலவினங்களுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) “நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற அலுவலகங்கள், உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் நீதிமன்றங்களிலுள்ள | மதிப்பீடு செய்யப்பட்டு பெறப்பட்ட நிதிஏற்பாடு உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | அமைச்சின் மூலம் இந்த செயற்திட்டத்தை இலங்கை கடற்படை மூலம் நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இதற்கு மாற்று வழியாக இந்த செயற்திட்டத்திற்குரிய மொத்த தொகையும் |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்'' செயற்திட்டத்தின் கீழ் கடற்படை மூலம் நிர்மாணித்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பின்வரும் நிர்மாண செயற்திட்டங்கள் மூன்றினதும் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்படவில்லை. | | கடற்படைக்கு வழங்கப்பவதாயின் வேலை ஆரம்பித்துச் செல்ல முடியும் என இலங்கை கடற்படை அறிவித்திருந்தது. எனினும், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் திணைக்களத்திற்கு நிதிஏற்பாட்டை விடுப்பதைத் தவிர நிதியை வழங்குவதற்கு முடியாதிருந்ததாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டமையினால் இலங்கை கடற்படை இந்த செயற்திட்டத்தை கையேற்பதை நிராகரித்திருந்தது. அதனால் நிதிஏற்பாடு முழுவதும் 2018 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (i) | நீதிச் சேவை ஆணைக்குழுக் கட்டிடம் - ரூபா 35 மில்லியன் | | |
| (ii) | கொழும்பு 07, கிறகரி மாவத்தையில் இல. B 88 என்ற உத்தியோகபூர்வ இல்லம் - ரூபா 06 மில்லியன் | | |
| (iii) | கொழும்பு - 07, கிறகரி மாவத்தையில் இல B 89 என்ற உத்தியோகபூர்வ இல்லம் - ரூபா 06 மில்லியன் | | |
| (ஆ) | ''புதிய நீதிமன்ற கட்டிடம் நிர்மாணம்'' இன் கீழ் கந்தளாய் நீதிமன்றத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு ரூபா 400 மில்லியன் நிதியேற்பாடு 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது மேலதிக நிதியேற்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 100 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும், அதனைப் பயன்படுத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டு பெறப்பட்ட நிதிஏற்பாடு உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு இந்த கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்குரிய மதிப்பீடு மற்றும் திட்டங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிறுவனத்தால் 2018 யூலை 25 ஆந் திகதி மதிப்பீடு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பல தடவைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அவதானிப்புக்களின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. செய்திப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கூறுவிலை கோரப்பட்டதன் பின்னர் இந்த செயற் |

| | | |
|---|---|---|
| | | திட்டத்திற்காக 2018 நவம்பர் 19 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெறப்பட்டிருந்தது. அதன் பின்னர் அமைச்சரவை மாற்றம் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் திருத்தத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்காக கேள்வி கையளிப்பதற்கு முடியாதிருந்தமையால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 03 நீதிமன்ற தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள காணி, நீதிமன்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிற்கு உரித்தானது என உறுதிப்படுத்துவதற்காக உரித்துறுதி அல்லது கையளித்தல் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி தொடர்பான உரித்து தீர்க்கப்படல் வேண்டும் | காணியைக் கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 3.4 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏற்பட்ட இரண்டு வாகன விபத்துக்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் மற்றும் காப்புறுதி உரித்துக்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாடு அமைச்சின் மூலம் செலுத்தப்பட்டிருந்தமை இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் | ஏற்பட்ட மொத்த நட்டமும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொள்கின்றோம். இது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

அப்பெறுமதி ரூபா 94,939 தொகை நட்டமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

**3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் 09 ஐயவினாக்களுக்கும் 2019 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 155(1) மற்றும் நிதிப்பிரமாணம் 40 என்பவற்றில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய பழைய கோவைகள் பரீட்சிக்கப்பட்டு விடயங்களை ஆய்வு செய்ததன் பின்னர் பதில் தயாரிக்கப்பட வேண்டியிருந்தமையால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கும் போது காலதாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் குறித்துரைத்த திகதியில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படுகின்றது. |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சியாம்பலாண்டுவ நீதவான் நீதிமன்ற உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் போது உத்தியோகபூர்வ இல்லத்தைச் சுற்றி சுவரொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், வாயிற்கதவை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்படாமையினால் ரூபா 130,489 தொகையான மேலதிக மதிப்பீடொன்று 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது அங்கீகரிக்கப்பட்டமையால் உரிய பிரகாரம் தேவையினை இனங்கண்டு மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இச்செயற்திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 70,460 | தேவையினை இனங்கண்டு மதிப்பீடு தாயரிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

பெறுமதியான 09 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் 5456 எண்ணிக்கையிலான மொத்த ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், ஆட்சேர்க்கப்பட்ட 3976 எண்ணிக்கையிலான மிகை ஊழியர்களை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை ஊழியர் எண்ணிக்கையை முறைமைப்படுத் துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்றங்களுக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் நீதி அமைச்சின் மூலமும், நீதிமன்ற சேவை ஆணைக்குழுவின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் இது தொடர்பாக பரீட்சித்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகையாகக் காணப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கையை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே நீதிமன்றங்களில் காணப்படுகின்ற இணைந்த சேவைகளுக்குரிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் அரச நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. |